செய்தி வெளியீடு எண்:660 நாள்: 06.10.2017

# செய்தி வெளியீடு

புதுதில்லியில் 6.10.2017 அன்று நடைபெற்ற 22–வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம்) அவர்கள் கலந்து கொண்டார்கள். வணிக பிரதிநிதிகள், வணிக கூட்டமைப்புகள் மற்றும் வணிகர்களிடமிருந்து வரப்பெற்ற பல்வேறு கோரிக்கைகளை ஒருங்கிணைத்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் வரிக்குறைப்பு மற்றும் விலக்களிப்பு செய்வது தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மன்ற கூட்டங்களில் கலந்துகொண்டு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

சென்ற முறை ஐதராபாத்தில் நடைபெற்ற மன்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் 40–க்கும் மேற்பட்ட பொருட்கள் மீதான வரியினை குறைத்தும், விலக்களித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாடு மற்றும் இதர மாநிலங்களின் வேண்டுகோளுக்கிணங்க இதுவரை 44 பொருட்களுக்கு வரிக்குறைப்பும் வரிவிலக்களிப்பும் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, ஜவுளி மற்றும் ஜவுளி பொருட்கள் தொடர்பான சில்லறை வேலை சேவைகள், அச்சுத் தொழில் தொடர்பான சில்லறை வேலை சேவைகள், விவசாய விளைச்சல்களை சேமித்து வைப்பதற்கான உள்கட்டமைப்பு அமைப்பது தொடர்பான ஒப்பந்த பணி சேவைகள் போன்ற 9 நேர்வுகளில் வரிக்குறைத்தும், வரிவிலக்களித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

புதுதில்லியில் நடைபெற்ற 22–வது கூட்டத்தில் பல முக்கிய நேர்வுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டன. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான

தகவல் தொழில்நுட்ப ரீதியாக ஏற்படக்கூடிய சவால்களை சமாளிக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட அமைச்சர்கள் அடங்கிய குழுவின் அறிக்கை இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையில் தொழில்நுட்ப ரீதியாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை கோடிட்டு காண்பித்து அதை மூன்று மாத காலத்திற்குள் களைவதற்கு வலியுறுத்தியுள்ளது.

ஏற்றுமதியில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை கண்டறிந்து களைவதற்கு மத்திய மற்றும் மாநில அலுவலர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கையும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறையின் கீழ் சிறு வரி செலுத்துவோர்க்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சில குறிப்பிட்ட சலுகைகள் வழங்குவதற்கு கலந்தாலோசிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், இணக்க முறையில் வரி செலுத்தும் சிறு வணிகர்களுக்கான உச்சவரம்பினை ரூ.75 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாக உயர்த்துவது; ரூ.20 இலட்சத்திற்கு கீழ் விற்பனை அளவு கொண்டுள்ள வணிகர் மாநிலங்களுக்கிடையே சேவைகள் வழங்குகையின் மீது கட்டாயமாக பதிவு பெற வேண்டும் என்பதிலிருந்து விலக்களித்தல்; மற்றும் ரூ.1.5 கோடிக்கு கீழ் வருடாந்திர விற்பனை அளவு கொண்டுள்ள வரி செலுத்துவோர்க்கு மாதந்தோறும் நமூனா தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்கு பதிலாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தாக்கல் செய்வது குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அரசு ஒப்பந்தப் பணிகளில் 25%-க்கு குறைவாக பொருட்கள் உபயோகிக்கும் பட்சத்தில், அதன் மீதான வரியினை குறைப்பது; அச்சுத் தொழில், கவரிங் நகைகள்,

அப்பளம்/பப்படம் போன்ற உணவு பொருட்கள் தொடர்பான சில்லறை வேலைகள் மீதான வரியினை குறைப்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

மேலும், அரசு திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு விநியோகிக்கப்படும் சத்து மாவு மீதான வரியினை 18%–லிருந்து 5%–ஆக குறைப்பது; Stapler pin மீதான வரியினை 28%–லிருந்து 18%–ஆக குறைப்பது; ஏற்றுமதியாளர்களால் விற்கப்படும் Duty Credit Scrips மீதான 5% வரியினை விலக்களிப்பது; செயற்கை நூலிழை, நூற்கப்பட்ட நூலிழை மற்றும் தையல் வேலைக்கு பயன்படுத்தப்படும் நூல்கள் மீதான வரியினை 18%–லிருந்து 12%–ஆக குறைப்பது; பிளாஸ்டிக், பேப்பர், ரப்பர் மற்றும் கண்ணாடி ஒட்டை உடைசல்கள் (scrap) மீதான வரியினை ஒரே சீராக அதாவது 5% வரிவிதித்தல்; பதிவு சின்னம் இடப்படாத ஆயுர்வேதா, யுனானி, சித்தா, ஹோமியோபதி மருந்துகள் மீதான வரியினை 12%–லிருந்து 5%–ஆக குறைத்தல்; பதிவு சின்னம் இடப்படாத கார வகைகள் மீதான வரியினை 12%–லிருந்து 5%–ஆக குறைத்தல்; தண்ணீர் பம்புகளின் பாகங்கள் மீதான வரியினை 28%–லிருந்து 18%–ஆக குறைத்தல் உள்ளிட்ட இனங்கள் தொடர்பான கருத்துருக்களும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. இதனொடு, தமிழ்நாடு முன்வைத்த 52 பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரியினைக் குறைப்பது மற்றும் விலக்களிப்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மேலும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் தமது குடும்பத்தினருக்கு ரூ.3000/– வரையிலான மதிப்பு கொண்ட பரிசுப் பொருட்களை அஞ்சல் அல்லது வான் வழியாக அனுப்புகையில், அதன் மீதான GST வரியிலிருந்து முழு விலக்கு அளிப்பது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

வணிகர்களுக்கு நமூனாக்கள் தாக்கல் செய்வதற்கான கால அளவினை மேலும் நீட்டிப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

பொருட்கள் மீதான வரி வீதத்தினை அத்தியாயம் வாரியாக ஆய்வு செய்து பரிந்துரை செய்வதற்காக மத்திய மற்றும் மாநில அலுவலர்கள் அடங்கிய துணை குழு ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவானது, தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்களிலிருந்து வரப்பெற்ற பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரியினை குறைப்பது மற்றும் விலக்களிப்பது தொடர்பான கோரிக்கைகளை பரிசீலித்து தனது பரிந்துரையினை வழங்கிடும்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**